**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 173/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. மலர் |
| Father's Name/Husband Name: | திரு. பெருமாள் |
| Village : | உடும்பியம் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 41/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 11.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 2,5 ஆஜர். எதிரிகள் 1, 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது உடும்பியம் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். இந்த வழக்கு சம்பவம் குறித்து எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டேன். வழக்கு சம்மந்தமாக மேல்நடவடிக்கை வலியுறுத்தவில்லை. நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையின் போது கடந்த 30.11.2018ம் தேதி அன்று மதியம் 3 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது என் கணவர் வைத்துள்ள ே ஹாட்டலில்

நடந்த பிரச்சனை சம்மந்தமாக எதிரிகள் என்னிடம் ஆபாசமாக பேசி வீட்டிற்குள் நுழைந்து என் கணவரைப் பற்றி கேட்டு உருட்டுக்கட்டையால் என் உடம்பில் அடித்து தலை முடியை பிடித்து இழுத்து கையிலும் உடம்பிலும் முகத்திலும் அடித்து உன் கணவர் எப்படி கேஸ் கொடுப்பான் என்று கூறி தாக்கியதாகவும் உருட்டுக் கட்டையால் மாறி மாறி அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டி விட்டு சென்றதாக மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்து போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.